# அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி

## டெண்டர் ஷெட்யூல்டு

ந.க.எண். 1840/2021/சி3 நாள்.22.07.2022

பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலைச் சார்ந்த கேசாலா, சின்னக்குமாரர் விடுதி வளாகத்தில் உள்ள உணவகக் கட்டிடம் – வாடகை உரிமம் – ஆணையர் அனுமதி வழங்கும் நாள் முதல் மூன்று ஆண்டுகள் முடிய உள்ள காலத்திற்கு, உணவகம் நடத்துவதற்கு நிர்ணயம் செய்யப்பட்ட நியாய வாடகை ரூ.31,000/–ஐ அடிப்படை கேள்வியாக வைத்து 10.08.2022ம் தேதி நண்பகல் 12.00 மணியளவில் நடைபெறவுள்ள பொது ஏலம்/டெண்டருக்கான ஷெட்யூல்.

| டெண்டர் இனம் | டெபாசிட் தொகை வங்கி வரைவோலை எண். பே. ஆடர் எண். நாள். | சால்வன்சி சான்றிதழ் விவரம் | டெண்டர்தாரர் குறிப்பிடும் தொகை எண்ணால் மற்றும் எழுத்தால் குறிப்பிடவேண்டும் மாதம் 1க்கு வாடகை (முதலாண்டுக்கு மட்டும்) ரூ. பை |
|---|---|---|---|
| கேசாலா, சின்னக்குமாரர் விடுதி வளாகத்தில் உள்ள உணவகக் கட்டிடம் (சமையல் அறை மற்றும் உணவுக்கூடம் மட்டும்) | | | |

குறிப்பு.–

1. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள டெண்டர் நிபந்தனையில் ஒவ்வொரு பக்கத்திலும் டெண்டர் கொடுப்பவர் கையொப்பமிட வேண்டும்.
2. காப்புத் தொகைக்காக வங்கி வரைவோலை/பே ஆர்டர் உள்ளவர்கள் மட்டுமே டெண்டர் கொடுக்க முடியும்.
3. டெண்டர் படிவத்திலுள்ள நிபந்தனைகளை ஏற்று இந்த டெண்டரை கொடுப்பதற்கான உறுதி அளிக்கவேண்டும்.
4. டெண்டர் கவரில் எந்த இனத்திற்கு டெண்டர் என்று குறிப்பிட வேண்டும்.
5. கவரில் டெண்டர்தாரர் முழு விலாசம் குறிப்பிடப்பட வேண்டும்.

டெண்டர்தாரரின் கையொப்பம்
(முழு விலாசத்துடன்)

## அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழனி.

**ந.க.எண்.1840/2021/சி3 நாள். 22.07.2022**

**சின்னக்குமாரர் விடுதி வளாக உணவகம் – வாடகை உரிமம் காலம் (ஆணையர் அனுமதி வழங்கும் நாள் முதல் மூன்று வருட காலத்திற்கு மட்டும்)**

**பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

இத்திருக்கோயிலுக்குச் சொந்தமான கோசாலா சின்னக்குமாரர் விடுதி வளாகத்தில் அமைந்துள்ள உணவக கட்டிடத்தின் மாத வாடகை உரிமத்தை ஆணையர் அனுமதி வழங்கும் நாள் முதல் மூன்று வருட காலத்திற்கு மட்டும் பொது ஏலம்/டெண்டர் மூலம் அனுபவித்துக்கொள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு எதிர்வரும் 10.08.2022 தேதி நண்பகல் 12.00 மணியளவில் திருக்கோயில் தலைமை அலுவலகத்தில் வைத்து பொது ஏலம்/டெண்டர் நடைபெறும்.

| வ. எண் | ஏலம் விடப்படும் உணவகம் விவரம் | டெபாசிட் தொகை ரூ. | சால்வன்சி ரூ. | மாத வாடகை உரிமை தொகை குறிப்பு |
|---|---|---|---|---|
| 1. | கோசாலா, சின்னக்குமாரர் விடுதி வளாகத்திலுள்ள உணவகக்கட்டிடம் (சமையல் அறை மற்றும் உணவுக்கூடம் மட்டும்) (பரப்பு 1937.50 சதுரடி) | 2,00,000/– | 2,00,000/– | பொது ஏலம்/டெண்டர் ஆரம்ப கேள்வித் தொகை ரூ.31,000/–ல் அதிகபட்ச கேள்வி தொகையை தேர்வுசெய்யப்பட்டு ஆணையர் ரத்து அங்கீகாரத்திற்கு உட்பட்டு முடிவுசெய்யப்படும். அங்கீகரிக்கப்படும் தொகையிலிருந்து இரண்டாவது வருட மாத வாடகை 15% உயர்வு செய்தும், மூன்றாம் வருடம் இரண்டாம் வருட மாத வாடகையில் 15% உயர்வு செய்தும் நிர்ணயிக்கப்படும். |

**டெண்டர் படிவம் விலை ரூ.200/–**

1. டெண்டர் படிவம் வழங்கப்படும் நாள்.– 23.07.2022 முதல் 09.08.2022 முடிய மாலை 5.30 மணிக்குள் இத்திருக்கோயில் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
2. பூர்த்தி செய்யப்பட்ட டெண்டர் படிவம் செலுத்துவதற்கு கடைசி நாள்.– 10.08.2022 முற்பகல் 11.30 மணி வரை
3. பொது ஏலம் நடைபெறும் நாள்.– 10.08.2022 நண்பகல் 12.00 மணி
4. டெண்டர் திறக்கப்படும் நாள்.– 10.08.2022 ஏலம் முடிந்தபிறகு.

### நிபந்தனைகள்

1. ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏலத்தில் கலந்துகொள்ள விருப்பமுள்ளவர்கள் டெபாசிட் தொகையை வங்கி வரைவோலையாக **"இணை ஆணையர்/செயல் அலுவலர், அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி"** என்ற

பெயரில் டெபாசிட் செலுத்தியும், சால்வன்சி 01.07.2022ம் தேதிக்குப்பின் வட்டாட்சியரிடம் பெறப்பட்ட அசல் சால்வன்சி சான்றிதழ் தாக்கல் செய்தும், ஏலத்தில் கலந்துகொள்ளலாம். சால்வன்சி சான்றிதழை வழங்க இயலாதவர்கள் சால்வன்சிக்குரிய டெபாசிட் தொகைக்கு வங்கிவரைவோலையாக தனியாக செலுத்தப்படல் வேண்டும்.

2. ஒப்பந்தபுள்ளி மற்றும்பொது ஏலத்தில் உயர்ந்தபட்ச கேள்வி கேட்டவர் ஏலதினத்தன்று ஏலத்தொகை முழுவதையும் உரிய வருமான வரி மற்றும் இதரவரியுடன் செலுத்த வேண்டும்.

3. ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏலம் இந்து சமய அறநிலையத்துறைசட்டவிதிகளுக்கும், இதர அங்கீகாரத்திற்கும் உட்பட்டது.

4. இதர நிபந்தனைகளை திருக்கோயில் அலுவலகத்தில் அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் தெரிந்து கொள்ளலாம்.

(ஓம்).நா.நடராஜன்
இணை ஆணையர்/செயல் அலுவலர்

/உண்மை நகல்/உத்தரவுபடி/

கண்காணிப்பாளர்

## அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி

## ஏல நிபந்தனைகள்

### சின்னக்குமாரர் விடுதி வளாக உணவகம் – வாடகை உரிமம் காலம் (ஆணையர் அனுமதி வழங்கும் நாள் முதல் மூன்று வருட காலத்திற்கு மட்டும்)

1. ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏலத்தில் கலந்துகொள்ள விருப்பமுள்ளவர்கள் டெபாசிட் தொகையை வங்கி வரைவோலையாக **"இணை ஆணையர்/செயல் அலுவலர், திருக்கோயில், பழனி என்ற பெயரில்"** டெபாசிட் செலுத்தியும், சால்வன்சி தேவைப்படும் இனங்களுக்கு 01.07.2022-ம் தேதிக்குப்பின் வட்டாட்சியரிடம் பெறப்பட்ட அசல் சால்வன்சி சான்றிதழ் தாக்கல் செய்தும், ஏலத்தில் கலந்துகொள்ளலாம். சால்வன்சி சான்றிதழை வழங்க இயலாதவர்கள் சால்வன்சிக்குரிய தொகையினை வங்கி வரைவோலையாக தனியாக செலுத்தப்படல் வேண்டும். ஒவ்வொரு கடைக்கும் தனித்தனியே பொதுஏலம்/டெண்டர் விடப்படும். பொதுஏலத்தில் கலந்துகொள்பவர்கள் ஒவ்வொரு கடைக்கும் தனித்தனியாக அந்த அந்த இனங்களுக்கு எதிரே குறிப்பிட்டுள்ள டெபாசிட் தொகையினை செலுத்தி பொது ஏலத்தில் கலந்து கொள்ளவேண்டும்.
2. ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏலத்தில் உயர்ந்தபட்ச கேள்வி கேட்டவர் ஏல தினத்தன்று மாத வாடகை தொகையில் 10 மடங்கு தொகையை டெப்பாசிட்டாக செலுத்தவேண்டும்.
3. ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏலம் இந்து சமய அறநிலையத் துறை சட்டவிதிகளுக்கும், சென்னை ஆணையரின் இரத்து அங்கீகாரத்திற்கும் உட்பட்டது.
4. வாடகை உரிமகாலம் ஆணையர் அனுமதி வழங்கும் நாளிலிருந்து மூன்றாண்டு காலத்திற்கு மட்டும் ஆகும். கடைக்கான வாடகை உரிமம் பொது ஏலம்/டெண்டர் மூலம் விடப்படும். பொதுஏலம்/டெண்டரில் இந்து மதத்தை சார்ந்தவர்கள் மட்டுமே கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவர்.
5. வாடகை உரிமம் காலம் முடிந்த பின் உரிமதாரர் கட்டிடத்தை காலிசெய்து திருக்கோயில் வசம் ஒப்படைக்கவேண்டும் ஆணையர் அனுமதி வழங்கும் நாளிலிருந்து மூன்றாண்டு காலம் முடிந்த பின் கட்டிடம் சுவாதீனம் திருக்கோயில் வசம் தானாகவே வந்துவிடும். தற்போதைய வாடகை உரிமகாலம் முடிய மட்டுமே.
6. கடை வாடகை உரிமம் மூன்று ஆண்டுகளுக்கு உரியது. முதல் ஆண்டு வாடகையில் 15% உயர்வு வீதம் இரண்டாம் ஆண்டு வாடகையும், இரண்டாம் ஆண்டு வாடகையில் 15% உயர்வு வீதம் மூன்றாம் ஆண்டு வாடகையும் நிர்ணயம் செய்யப்படும்.
7. கடை வாடகை உரிமம் பெற்றவர்கள் பிரதிமாதம் 5ம் தேதிக்குள் தவறாமல் வாடகை செலுத்தவேண்டும். வாடகை உரிமகால முடிவில் ஆணையர் அனுமதி வழங்கிய நாளிலிருந்து மூன்றாண்டுகள் முடிந்த பின் திருக்கோயில் வசம் சுவாதீனம் ஒப்படைக்கவேண்டும். ஒப்படைக்கத்தவறினாலும், மூன்றாண்டுகள் முடிந்த பின் திருக்கோயில் வசம் சுவாதீனம் தானாகவே வந்துவிடும்.
8. கடை வாடகை உரிமம் பெற்றவர்கள் அக்கடையை உணவகம் தவிர வேறு எந்த உபயோகத்திற்கும் பயன்படுத்தக் கூடாது.

9. பொதுஏலம் / டெண்டரில் உயர்ந்த கேள்வி கேட்டவர் தவிர இதர ஏலதாரர்களின் டெபாசிட்டுகள் உடன் திரும்ப வழங்கப்படும்.

10. வாடகை ஒப்பந்தப் பத்திரம் ரூ.20/-க்கான முத்திரைத்தாளில் தன் சொந்தச் செலவில் எழுதி பதிவு செய்து தரல் வேண்டும். ஒப்பந்தப் பத்திரம் உரியகாலத்தில் எழுதித்தரதவறினால், ஏலம் ரத்துசெய்து மறு ஏலம் விடப்படும். ஏலத்தில் திருக்கோயிலுக்கு ஏதேனும் இழப்பேற்பட்டால், அதனை முந்தைய ஏலதாரரிடம் வசூல் செய்வதுடன் இதுவரை செலுத்தியுள்ள வாடகை உரிமதொகை மற்றும் ஏல டெபாசிட் திருக்கோயிலுக்கு ஆதாயமாக வரவு வைத்துக்கொள்ளப்படும்.

11. வாடகை உரிமகாலத்திற்கு இடைப்பட்டகாலத்தில் கடை திருக்கோயிலுக்கு தேவைப்பட்டால் கடையினை எவ்விததடையுமின்றி உடனேகாலிசெய்து கொடுக்கவேண்டும்.

12. வாடகை உரிமகாலம் ஆணையர் அனுமதி வழங்கிய நாளிலிருந்து மூன்றாண்டுகள் முடிந்த பின் உரிமதாரர் கட்டிடத்தை காலிசெய்து திருக்கோயில் வசம் ஒப்படைக்கவேண்டும். மூன்றாண்டுகள் முடிந்த பின் திருக்கோயில் கட்டிடத்தின் சுவாதீனம் திருக்கோயில் வசம் தானாகவே வந்துவிடும். கட்டிடத்தில் எவ்விதசேதாரமும் இல்லாமல் ஒப்படைக்கவேண்டும். சேதாரங்கள் இருந்தால் அதற்குரிய நஷ்டஈடு செலுத்தவேண்டும்.

13. வாடகை உரிமகாலம் முடிவடையும் முன்பே வாடகை உரிமதாரர் கடையினை காலிசெய்துவிட்டால், மேற்படி கடை பொது ஏலம் மூலம் மீண்டும் வாடகை உரிமத்திற்குவிடப்படும். செலுத்தப்பட்ட வாடகையோ, டெபாசிட் தொகையோ திரும்பத் தரப்படமாட்டாது.

14. வாடகை உரிமத்திற்கு எடுக்கப்பட்ட கடையில் மதுபானவகைகளோ, லாகிரிவஸ்துக்களோ, இறைச்சி வகைகளையோ மற்றும் திருக்கோயிலிலிருந்து ஆட்சேபிக்கப்படும் பொருட்களோ விற்பனை செய்யக்கூடாது. பிளாஸ்டிக் பைகள் உபயோகித்தல் கூடாது.

15. திருக்கோயில் மூலம் கடைக்கான மின்இணைப்பு செய்துதரப்பட்டு உள்ளகடைகளுக்கு வாடகைதாரர் பயன்படுத்திடும் மின்சாரத்திற்குரியமின் கட்டணத்தை பிரதிமாதம் 8ம் தேதிக்குள் திருக்கோயில் கருவூலத்தில் செலுத்தவேண்டும்.

16. வாடகை உரிமத்திற்கு எடுக்கப்படும் கடையினை உள்வாடகைக்கு விடக்கூடாது பெயர் மாற்றம் செய்யக்கூடாது. கடையினை உள்வாடகைக்குவிட்டால் வாடகை உரிமம் உடனடியாக இரத்து செய்யப்பட்டு உரிமதாரர் மீது சட்டவிதிகளின்படி நடவடிக்கை எடுக்கப்படும். இதனால் திருக்கோயிலுக்கு ஏற்படும் சகலவிதமான இழப்புகளுக்கும் குற்றவியல் நடவடிக்கைகளுக்கும் உரிமதாரரே முழுப்பொறுப்பாவார்கள்.

17. கட்டிடத்தில் எவ்வித எழுத்து பூர்வமான முன் அனுமதியின்றி மராமத்து வேலையும் செய்யக்கூடாது. தேவையான மராமத்துப் பணிகளை திருக்கோயிலிருந்து முன்அனுமதி பெற்றுத்தான் செய்யவேண்டும்.

18. வாடகை உரிமத்திற்கு விடப்படும் கட்டிடத்தின் அளவிற்குள்தான் வாடகை உரிமதாரர் வியாபாரத்தினை அனுபவிக்கும் உரிமை உள்ளது. ஆகவே, எக்காரணத்திற்காகவும் விரிவுபடுத்தகூடாது. மீறினால் ஆக்கிரமிப்பாளராக கருதப்பட்டு வாடகை உரிமம் ரத்துசெய்யப்படும்.

19. திருக்கோயிலுக்குக் குத்தகைபாக்கி, வாடகை பாக்கியுள்ளவர்கள் திருக்கோயிலுக்கு எதிராக வழக்கு தொடுத்துள்ளவர்கள் தீர்ப்புக் கடனாளிகள் மற்றும் திருக்கோயிலுக்கு எதிராக செயல்பட்டவர்களும் அவர்கள் வாரிசுதாரர்கள், உறவினர்கள் திருக்கோயில் ஊழியர்கள், உறவினர்களும் ஏலத்தில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள்.

20. உரிமகாலத்தில் தெய்வாதீனமாக வாடகை உரிமதாரரது உடைமைகளுக்கு சேதாரம் ஏற்பட்டால், அதற்கு திருக்கோயில் பொறுப்பாகாது.

21. பொது ஏலம்/டெண்டர் இந்து சமய அறநிலையத்துறை சட்டதிட்டங்களுக்கும், ஆணையரின் அங்கீகாரத்திற்கும் உட்பட்டது.

22. இதர நிபந்தனைகளை அலுவலக நாட்களில் அலுவலக நேரங்களில் தெரிந்து கொள்ளலாம்.

23. பொது ஏலம் / டெண்டர் நிபந்தனைகளை கூட்டவோ, பொது ஏலம் / டெண்டரை இரத்து செய்யவோ இணை ஆணையர்/செயல்அலுவலர் அவர்களுக்கு அதிகாரம் உண்டு.

24. கொரானா வைரஸ் பரவுதலை தடுக்கும் நடவடிக்கையாக அரசின் நிலையான வழிகாட்டி நடைமுறைகளை கடைபிடித்து ஏலத்தில் கலந்து கொள்பவர்கள் கட்டாயமாக முகக்கவசம் அனிந்து ஏலத்தில் கலந்து கொள்ளவேண்டும், மேலும் ஏலத்தில் கலந்து கொள்பவர்கள் கிருமி நாசினி கொண்டு கைகளை சுத்தம் செய்த பின்னர் ஏலத்தில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர்.

(ஓம்). நா.நடராஜன்
இணை அணையர்/செயல் அலுவலர்

/உண்மை நகல்/உத்தரவுபடி/

கண்காணிப்பாளர்